



கள்ளக்குறிச்சி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக்கழகங்களுக்கு உட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 14 ஆயிரம் பாக முகவர்கள் BLA2 & பூத் அளவிலான பொறுப்பாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.






மாணவ மாணவியரின் தனித்திறமையை அடையாளம் கண்டு அவர்களுக்குத் திறன் சார்ந்த பயிற்சிகளை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் கழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது தான் நான் முதல்வன் திட்டம். முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான நான் முதல்வனில் பயிற்சி பெற்ற மாணவ மாணவியருடன் கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. பள்ளியில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தால் பயனடைந்த மூலம் மாணவச்செல்வங்களின் கருத்துகளைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். தமிழ்நாட்டு மாணவர்கள் உலக அரங்கில் சாதிக்க "நான் முதல்வன் திட்டம் துணை நிற்கட்டும் என குறிப்பிட்டார். உடன் அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நேற்று (20.07.2023) சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 7வது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஸ்ஷிப்2023, கோப்பையை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கொண்டும் செல்லும் வகையில் பாஸ்திபால் (Pass the Ball) நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்.

# 7-வது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஸ்ஷிப் - 2023 கோப்பை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை,ஜூலை.21-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று (20.07.2023) சென்னை, மெரினா கடற்கரை, கலங்கரை விளக்கம் (Marina light House) அருகில் 7ஆவது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஸ்ஷிப்2023 கோப்பை, "பொம்மன் இலச்சினை" (Bomman Mascot) அறிமுகம் மற்றும் "பாஸ்திபால்" (Pass the Ball) தொடக்க விழா நடைபெற்றது.

இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆசிய கோப்பையை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கொண்டும் செல்லும் வகையில் "Pass the Ball' நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். மேலும் ஆசிய கோப்பை பொம்மன் இலச்சினையை (BommanMascot) அறிமுகப்படுத்தி விழாப் பேருரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மகேஸ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜான் எபினேசர், ஆர்.டி.சேகர், பி.சிவகுமார், என்.எழிலன், எம்.கே.மோகன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, ஜெ.கருணாநிதி, தா.வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, ஹாக்கி இந்தியா தலைவர் பத்மஸ்ரீ டாக்டர் திலிப்டார்க்கி, செயலாளர் போலோநாத்சிங், பொருளாளர் சேகர் மனோகரன் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, ஒலிம்பியன் பாஸ்கரன், கோவிந்தா மற்றும் முகமது ரியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் – 'நான் முதல்வன்' திட்டம் குறித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாணவர்களுடன் கலந்துரையாடல்!

## திறன் பயிற்சி சான்றிதழ்களை வழங்கினார்!

கள்ளக்குறிச்சி, ஜூலை.21-

கள்ளக்குறிச்சி மாவட்டம் நீலமங்கலம் ஏ.கே.டி பள்ளி கூட்டரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நான் முதல்வன் திட்டம் குறித்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுடன், பொதுப்பணித்துறை (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள், சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னசென்ட திவ்யா, சிறப்பு திட்ட அமலாக்கத்துறை செயலாளர் மரு. தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவன் குமார் ஆகியோர் முன்னிலையில் (19.07.2023 அன்று கலந்துரையாடினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இரண்டு கண்களாக பார்ப்பது, சுகாதாரம் மற்றும் பள்ளி கல்வித்துறையை தான். பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்காக நான் முதல்வன் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு மாணவரும் தனது துறையில் முதல்வனாக திகழ வேண்டுமென்பதே நான் முதல்வன் திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் கீழ் 14 லட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் பயிற்சி பெற்ற கலை அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த 1.425 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் வருங்காலத்தில் தொழில் முனைவோராகவும், தொழில் வல்லுனராகவும் உருவாகிட இத்திட்டம் உறுதுணையாக இருக்கும்.

மாணவர்களின் தனித்திறமையை வெளிக்கொண்டு வந்து, வேலையில்லாத நிலையை மாற்றிடவே நான் முதல்வன் திட்டம் கொண்டுவரப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்பு கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்திற்கென கல்லூரி ஒன்றிற்கு ரூ.70 லட்சம் வீதம் ரூ.21 கோடியே 70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைவினை பொருட்கள் செய்யும் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ.5 கோடி செலவில் கைவினை பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

மாணவர்களின் கற்றலை அதிகரிக்க விளையாட்டு முறை கற்றலை ஊக்குவிக்கும் வகையில் ரூ.1 கோடி செலவில் 1,000 பள்ளிகளில் விளையாட்டு முறை கற்றல் செயல்படுத்தப்படவுள்ளது. தமிழ்நாடு திறன் பயிற்சி மையங்களில் பயில்பவர்களுக்கு பயிற்சிநின்றுவிடாமல் பல்வேறு திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு நான்சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. மாணவர்கள் பாடங்களை படித்து, மதிப்பெண் பெறுவதோடு செயல்படுத்தப்படுகிறது.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் ஆர்டிபிஷியல் இன்டலிஜன்ஸ், மிஷன் லேர்னிங் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை திறன் பயிற்சியில் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரின் தனித்திறமையை கண்டறிந்து அதனை ஊக்கப்படுத்துவதே நான் முதல்வன் திட்டத்தின் தனிச்சிறப்பு.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் திறன் பயிற்சிகளை வழங்க அந்தந்த கல்லூரி பேராசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கொன பேராசிரியர்களுக்கு தனி பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இதுபோன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

அரசு திட்டங்களின் வெற்றி என்பது அதனால் அடையும் பயனை பொருத்து அமையும். நான் முதல்வன் திட்டத்தினை மாணவர்கள் அனைவரும் பயன்படுத்தி கொள்ள வேண்டுமென இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுடன் திறன் பயிற்சி, வேலைவாய்ப்புகள் மற்றும் நான் முதல்வன் திட்டம் குறித்து கலந்துரையாடினார்.

தொடர்ந்து, சின்னசேலம் இலங்கை அகதிகள் முகாமில் உள்ள 10 மாணவர்களுக்கு திறன் பயிற்சிக்கான சான்றிதழை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ந.மோகன்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் நா.சத்தியநாராயணன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம். க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், அனைத்து துறை அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ - மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

